# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

## அசல் வழக்கு எண். 14/2023

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருங்குளவன் | ஜாதி | |
| த/பெ. | ராமசாமி | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 65 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 20.08.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கின் வாதி / வாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 1393 பசலி முதல் 1431 பசலி வரையிலான நிலவரி ரசீதுகள் எண்ணிக்கை 31 தாக்கல் செய்கிறேன். மேற்படி ரசீதுகளின் புல எண் குறிப்பிடப்படவில்லை என்ற பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் அது வா.சா.ஆ 1 வரிசை எண்ணிக்கை 31 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பசலி 1395, 1396, 1397, 1398 அடங்கல்கள் சான்றிட்ட நகல்கள் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 வரிசை எண்ணிக்கை 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.01.1990 தேதி சிலட்டுர் ஊராட்சி கூட்ட தீர்மானம் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.03.1996 தேதிய அறந்தாங்கி வட்டாட்சியரின் குறிப்பாணை சார்பு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். ஆது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.08.1996 தேதிய சிலட்டுர் வருவாய் ஆய்வாளர் அறந்தாங்கி வட்டாட்சியருக்கு அனுப்பிய அறிக்கை நோட்டரி சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.01.2023 தேதியிட்ட அறந்தாங்கி வட்டாட்சியரின் ஆணை சார்பு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.01.2023 தேதிய அறந்தாங்கி வட்டாட்சியர் எனக்கு அனுப்பிய அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒ/ம். V. சிவகாமசுந்தரி,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**